பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: கார்த்திகை 9உ (25-11-67) சனி — வெளியூர்: கார்த்திகை 10உ (26-11-67) ஞாயிறு [இதழ்: 136

## தமிழகத்தில் 5,346 வட்டிக்கடைகள்

சென்னை, நவ. 24—

"தமிழகம் முழுவதிலும் மொத்தம் 5,346 நகை அடகு பிடிக்கும் கடைகள் இயங்குகின்றன; விதிகளுக்கு மாறாக, வட்டி வசூலிப்பதாகத் தகவல் இல்லை; அப்படி வசூலிப்பது அரசுக்குத் தெரிந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்"

என்று சட்ட அமைச்சர் செ. மாதவன் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

# அரசியல் படுகொலை!

சென்ற ஏழு திங்களாக வங்காளத்தில் செயல்பட்டுவந்த **அஜாய் முகர்ஜியின்** கூட்டு அமைச்சரவையை, அம்மாநிலத்தின் ஆளுநர் தர்மவீரா, போதிய காரணமின்றி நீக்கிவிட்டிருக்கிறார்; 'அமைச்சரவையைப் பதவியிலிருந்து ஆளுநர் வெளியேற்றிவிடப் போகிறார்' என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே ஆகும்.

பதவியைவிட்டு வெளியேற்றிவிட வேண்டிய அளவுக்கு வங்காள அமைச்சரவை செய்த குற்றம் எதுவுமில்லை. அமைச்சரவையைப் பதவியிலிருந்து நீக்கத் துணிந்த ஆளுநர், ஏற்கத்தக்க காரணம் எதையும் குறிப்பிடவில்லை என்பது இத்தொடர்பில் சிந்திக்கத் தக்கது.

வங்காளத்தில் கூட்டு அமைச்சரவை மார்ச்சு மாதம் இரண்டாந்தேதியன்று ஆட்சிப்பொறுப்பை ஏற்றது. அன்று முதலே, அந்த ஆட்சியைக் கவிழ்க்க இந்திய அரசும், காங்கிரசுக் கட்சியின் மேல்மட்டத் தலைவர்களும் கூட்டாகச் சேர்ந்து திட்டமிடலாயினர்.

மேற்கு வங்கத்தின் ஆளுநராகத் தர்மவீரா நியமனம் செய்யப்பட்ட பொழுதே, 'அஜாய் அமைச்சரவையைப் பதவியிலிருந்து நீக்க—அதற்குத் தேவைப்படக்கூடிய அடிப்படையை இந்திய அரசு அமைத்துவிட்டது' என, தெரிந்தவர்கள் தீர்மானித்துக் கொண்டனர். அவ்வாறு தீர்மானிக்கப்பட்டபடி, இப்பொழுது முடிவு அமைந்துவிட்டது.

கூட்டணி அமைச்சரவை, மார்ச்சு திங்கள் இரண்டாம் நாள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. இக்கூட்டணி அமைச்சரவையில், வலதுசாரி—இடதுசாரி பொதுவுடைமைக் கட்சிகள் உட்பட மொத்தத்தில் பதினன்கு கட்சிகள் இடம்பெற்றிருந்தன. பதினன்கு கட்சிகள் இடம்பெற்றுள்ள ஒரு அமைச்சரவையில், ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட கருத்துக்கள் எழுவது இயல்பே ஆகும்.

வங்காளக் கூட்டு அமைச்சரவையைப் பதவியிலிருந்து வெளியேற்றுவதையே குறியாகக்கொண்ட காங்கிரசு மேல்மட்டத் தலைவர்கள், முதன்முதலாக, முதலமைச்சர் அஜாய் முகர்ஜியையே கருவியாகப் பயன்படுத்த முனைந்தனர். காங்கிரசு மேல்மட்டத் தலைவர்களில் சிலர்—குல்சாரிலால் நந்தாமூலம்—விரித்த வலையில், முதலமைச்சர் முகர்ஜியும் காலடி எடுத்து வைத்துவிட்டார்.

'காங்கிரசுக் கட்சியின் ஆதரவுடன் முதலமைச்சராக அஜாய் முகர்ஜி, புதிய அமைச்சரவையை அமைத்திட வேண்டும்' என்பது குல்சாரிலால் நந்தாவின் ஏற்பாடு; ஆனால், நந்தா ஏற்பாட்டின் இரண்டாம் பகுதி நிறைவேற்றப்படவில்லை.

இந்தச் சூழ்நிலையில், அமைச்சரவையிலிருந்து விலகிக்கொண்டு, அஜாய் முகர்ஜி முதலமைச்சராகவே தொடர்ந்து இருப்பதற்குத் தாங்கள் ஆதரவு தந்துவரத் தயாராக இருப்பதாக இடதுசாரி பொதுவுடைமைக் கட்சியினர் வெளிப்படையாக அறிவித்தனர். அஜாய் முகர்ஜியைப் பற்றிக்கொண்டு, கூட்டு அமைச்சரவைக்கு வெடிவைக்க நந்தா தீட்டிய சதித்திட்டம், தக்க தருணத்தில்—இடதுசாரி பொதுவுடைமைக் கட்சியினர் செய்த அறிவிப்பால்—தகர்ந்துபோய் விட்டது!

அஜாய் முகர்ஜியும் விழித்துக்கொண்டு விட்டார்! கூட்டு அமைச்சரவையைக் கவிழ்க்கக் காங்கிரசு மேலிடத் தலைவர்களில் சிலர் தீட்டிய சதி ஏற்பாடு, அரைவேக்காடு ஆகப் போய்விட்டது!

முதல் சதித் திட்டம் முறிந்திட்டாலும், 'முகர்ஜியின் கூட்டு அமைச்சரவையைக் கவிழ்த்துவிட வேண்டும்' என்ற ஆசையை, காங்கிரசு மேல்மட்டத் தலைவர்கள் விட்டுவிடவில்லை; அந்த ஆசை, முன்பிருந்ததைவிடப் பல மடங்கு கூடுதலாகிவிட்டது.

முகர்ஜியின் கூட்டு அமைச்சரவையில் உணவு அமைச்சராக இருந்துவந்த **பி. சி. கோஷ்,** நவம்பர் 2-ந்தேதி தமது அமைச்சர் பதவியைத் துறந்துவிட்டார்; 'சனநாயக முன்னணி' என்ற பெயரால் ஒரு கட்சியையும் அவர் ஆரம்பித்தார்; அப்புதுக் கட்சியில், கூட்டணியில் இடம்பெற்றிருந்த 17 சட்டமன்ற உறுப்பினர்கள் சேர்ந்துகொண்டனர். இத்தொடர்பில், முன்னாள் மத்திய அமைச்சர் **உமாயூன் கபீர்** மேற்கொண்ட முயற்சி குறிப்பிடத்தக்கது.

பி. சி. கோஷ் உணவு அமைச்சர் பதவியைத் துறந்தமைக்கும்—'சனநாயக முன்னணி' என்ற பெயரால் புதிய கட்சியைத் துவங்கியதற்கும்—அப்புதிய கட்சியில் கூட்டணியைச் சேர்ந்த பதினேழு சட்டமன்ற உறுப்பினர்கள் சேர்ந்துகொண்டதற்கும்—காங்கிரசு மேலிடத் தலைவர்களுக்கும் இருந்திடக்கூடிய தொடர்பு எது என்பதற்கு விளக்கம் தேவையே இல்லை. காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவுடன், பி. சி. கோஷ், முதலமைச்சராக இப்பொழுது பதவியேற்றுக் கொண்டிருப்பதே, 'கூட்டணி அமைச்சரவையைக் கவிழ்த்திட காங்கிரசு மேலிடத் தலைவர்கள் திரைமறைவில் எடுத்துக்கொண்ட ஒழுக்கக்கேட்டை' அம்பலப்படுத்தப் போதியதாகும்.

'முகர்ஜியின் கூட்டு அமைச்சரவையைக் கவிழ்த்துவிட வேண்டும்' என்ற சதித் திட்டத்துக்கு, தக்க கருவியாகப் பயன்பட பி. சி. கோஷ் கிடைத்திட்டாலும், அச்சதித் திட்டத்தை நிறைவேற்றி வைக்க வாய்ப்பு வேண்டுமல்லவா? அத்தகைய வாய்ப்பை எப்படி உண்டாக்குவது? யார் உண்டாக்குவது?

'சட்டத்துக்கும்—சனநாயக நடைமுறைக்கும் ஒத்ததாக அம்முறை இருந்திடவேண்டும்' என்பதற்காக, 'கூட்டு அமைச்சரவை சட்டமன்றத்தில், வலிவை இழந்துவிட்டதா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்' என்ற கோரிக்கையை, ஆளுநரை விட்டுக் கிளப்பி, அவரைக்கொண்டே சட்டமன்றத்தை உடனடியாகக் கூட்டும்படி, கோரினர்—இந்திய அரசில் இடம் பெற்றிருக்கின்ற காங்கிரசுத் தலைவர்கள்! தம்மிடம் ஆளுநரால் கோரப்பட்ட இக்கோரிக்கையை, முதலமைச்சர் முகர்ஜி ஒரேயடியாக மறுத்துவிடவில்லை; ஆளுநர் கோரியபடி, இத்திங்கள் 18-ந் தேதியே கூட்ட மறுத்து, அடுத்த மாதம் மூன்றுவது கிழமையில் கூட்டுவதாக அறிவித்தார்.

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

# தடுமாற்றமா?--தட்டிக்கழிப்பா?

## முட்டுக்கட்டை போடும் டில்லி அமைச்சர்கள் பேச்சு

### 'சேலம் இரும்பாலை -- திட்டவட்டமான முடிவைக் கூறத் தயக்கமேன்?'--முதலமைச்சர் அறிஞர் அண்ணா முழக்கம்

சென்னை, நவ. 25—

"சேலம் இரும்பு ஆலையைத் தொடங்க முடியாது என்று டெல்லி அறிவித்துவிட்டால், தமிழக அரசே, இங்குள்ள தொழில் அதிபர்கள்—லேவாதேவிக்காரர்கள் ஆகியோர் உதவியுடன் ஒரு தொழில் அமைப்பைத் தொடங்கி அதன் மூலம் அந்த ஆலையை நடத்தலாம் என்று திட்டமிட்டு இருக்கிறது; இதையே நான் அண்மையில்கூட டில்லிக்கு எடுத்துக்கூறினேன்.

"ஜப்பான் நிபுணர்களும், ஒரு தடவைக்கு நான்கு தடவையாக, 'சேலம் இரும்பு ஆலையை உருவாக்கித் தருகிறோம்' என்று உறுதி கூறியிருக்கிறார்கள்; ஆனால், இந்த முயற்சிக்குக் குறுக்கே நின்று முட்டுக்கட்டை போடுவது டில்லிதான்! அவர்கள் 'சேலம் இரும்பு ஆலையை அமைக்க மாட்டோம்' என்று திட்டவட்டமாகவும் கூற மறுக்கிறார்கள்!

"டில்லியில் இருந்து இதுகுறித்து அடிக்கடி செய்திகள் வருகின்றன; 'சேலம் இரும்பு ஆலை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வரும்' என்கிறார் ஓர் அமைச்சர்; ஆனால் இன்னோர் அமைச்சர் 'நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உண்டா என்றே முடிவு செய்யவில்லை' என்கிறார்; இன்னொருவர், 'நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரும்புக்கு எவ்வளவு தேவை இருக்கிறது என்று பார்த்துவிட்டு, சேலம் இரும்பு ஆலையைப் பற்றி யோசிப்போம்' என்கிறார்! இப்படி, டில்லியில் உள்ளவர்கள் இடையே சேலம் இரும்பாலை குறித்துத் தடுமாற்றங்கள் இருக்கின்றன!

"இந்தத் தடுமாற்றங்கள், அவர்கள் அறிந்தே ஏற்பட்டு இருந்தால், அது கண்டிக்கத்தக்கது! அறியாமல் ஏற்பட்டிருந்தால் பரிதாபத்துக்குரியது! இரண்டில் எதுவாக இருந்தாலும், வருந்தத்தக்கது! சேலம் இரும்பாலை ஜப்பான் உதவியுடன் அமைப்பது இயலாத காரியம் அல்ல!"

என்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், நேற்று மாலை சென்னை அசோகா ஓட்டலில் 'சேலத்து இரும்பு' என்னும் நூலை வெளியிட்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்கள்.

சென்னை மாநிலக் கல்லூரிப் புவியியல் பேராசிரியர் டாக்டர் எஸ். சரவணன் எழுதிய இந்த நூலின் வெளியீட்டு விழா, சட்டமன்றத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் தலைமையில் நடைபெற்றது.

விசாலாட்சி பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. ம. மு. தணிகைமலை அனைவரையும் வரவேற்றார்.

நூலாசிரியர் திரு. சரவணன், தமது நூலைப் பற்றிய விளக்கவுரையாற்றினார்.

அண்ணா அவர்களால் வெளியிடப்பட்ட நூலைப் பெற்றுக்கொண்டு கல்வி — தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், நூலையும் நூலாசிரியரையும் பாராட்டிச் சிறப்புரையாற்றினார்.

இறுதியாக திரு. நடேசனார் அனைவருக்கும் நன்றியுரைத்தார்.

விழாத் துவங்குமுன் தேநீர் விருந்து நடைபெற்றது.

அண்ணா அவர்கள், இந்த நூலைக் குறித்துப் பேசுகையில், இது ஒரு 'முதல் நூல்' என்றும், 'உறுதுணை நூல்' என்றும், 'வழிகாட்டும் நூல்' என்றும், 'வண்ண நூல்' எனறும் வர்ணித்தார்கள்.

மேலும் பேசுகையில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"'வைதீக பாஷை'யில் சொல்ல வேண்டுமானால், சேலத்து இரும்புக்கு 'ஜாதகம்' சரியில்லைபோல் இருக்கிறது; எனவே தான், வெளிநாட்டு நிபுணர்களாலும், உள்நாட்டு வல்லுநர்களாலும் பாராட்டப்பெற்ற பிறகும், சேலத்தில் இரும்பு ஆலை அமைக்கப்படாமல் இருக்கிறது.

சேலத்தில் இரும்பு ஆலை அமைக்க கடந்த 15 ஆண்டுகளாகவே முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. இந்த ஆலைக்காகவும், தூத்துக்குடித் துறைமுகத்துக்காகவும், தி. மு. கழகம் எழுச்சி நாள் கொண்டாடியது.

இந்தப் புத்தகத்தில் உள்ள தகவலைப் படிப்பவர்கள், 'சேலம் இரும்பு ஆலைக்காக நாம் இது வரையில் பொறுத்துக்கொண்டிருந்ததே தவறு' என்று உணருவார்கள்!

நான், 'சேலம் இரும்பு ஆலை வேண்டும்' என்று கேட்பதை, சிலர் தவறாக எண்ணுகிறார்கள்! 'டில்லியுடன் மோத வேண்டும் என்ற நோக்கத்துடன், அண்ணாதுரை இதைக் கேட்கிறார்' என்று கருதுகிறார்கள்!

இது மிக தவறான கருத்தாகும். இந்தப் புத்தகத்தைப் படிக்கும் ஒவ்வொருவரும், 'சேலம் இரும்பாலைக்கு நாம் இப்போது எடுக்கும் முயற்சியே போதாது' என்று துடித்து எழுவார்கள்!

தமிழக அரசு ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள் எப்படியும் தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தையும், சேலம் இரும்பாலைத் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டுமென்று திட்டமிட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

# திரைப்படத் தணிக்கையிலும் டில்லி ஆதிக்கம்!

## மாநில அரசைக் கலக்காமலே குழு நியமனம்

### சட்டமன்றத்தில் அமைச்சர் சத்தியவாணிமுத்து குமுறல்

சென்னை, நவ. 25—

**"திரைப் படத் தணிக்கைக் குழுவை நியமிப்பதில்கூட மத்திய அரசு, மாநில அரசைக் கலக்காமல் எதேச்சாதிகாரமாக நடந்துகொள்கிறது"**

என்று, இன்று சட்டமன்றத்தில், செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் வருத்தத்துடன் குறிப்பிட்டார்.

திரைப் படத் தணிக்கைக் குழுவுக்கு அண்மையில் மூன்று உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர் என்றும், அவர்களை நியமிப்பது பற்றி மாநில அரசுடன் கலந்தாலோசிக்கவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதுபற்றித் தாம் அண்மையில் டெல்லி சென்றிருந்தபோது மத்திய அமைச்சர் திரு. கே. கே. ஷாவிடம் முறையிட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

"ஆபாச சினிமாப் படங்களையும், ஆபாசச் சுவரொட்டிகளையும் தடுப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது?"

என்ற கேள்விக்கு அமைச்சர் பதி

(4-ம் பக்கம் பார்க்க)

# மொழிப் பிரச்சினை இன்னும் முடிந்துவிடவில்லை!

## மாணவர்களின் உணர்ச்சியை மதிக்க மறுப்பதேன்?

### 'பிரேக்' இல்லாத 'இரயில்'களாக மாணவர்களை ஆக்காதீர் — டில்லிக்கு அறிஞர் அண்ணா எச்சரிக்கை

சென்னை, நவ. 24—

"மாணவர்கள், 'இந்தியை ஆட்சிமொழியாக ஏற்கமாட்டோம்' என்று திட்டவட்டமாக அறிவித்தும், டில்லி அரசு அதனைக் காது கொடுத்துக் கேட்டதாகத் தெரியவில்லை.

"மொழிப் பிரச்சினை, ஜீவாதாரப் பிரச்சினையாகும். இதை டில்லி உணரவில்லை; பிரச்சினை தீர்ந்துவிட்டதாகவே அவர்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள்.

"மாணவர்கள் என்ற இரயிலுக்கு 'பிரேக்' போல தி. மு. கழகம் இருந்துவருகிறது; இந்த 'பிரேக்' நீக்கப்பட்டுவிட்டால், இரயில் எப்படிப்பட்ட வேகத்தில் போகும் என்பதை நான் சொல்லத் தேவையில்லை"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், தேனாம்பேட்டை எஸ். ஐ. இ. டி. கல்லூரி மண்டபத்தில் அனைத்துக் கல்லூரி மாணவர் பேரவையைத் துவக்கிவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்கள்.

மாணவர் பேரவைத் தலைவர் இரா. சனார்த்தனம் விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

விழாத் துவங்குமுன், செயலாளர் ஏ. எச். முகம்மது கேட்டுக்கொண்டதற்கிணங்க—டாக்டர் அ. சிதம்பரநாதனார் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் அனைவரும் ஒரு நிமிட நேரம் மௌனமாக எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.

#### ஒப்புதல் கிடைத்தே தீரும்

அண்ணா அவர்கள் தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"நான் இங்கு கற்பனை கலந்த அறிவுரை தரவில்லை; உங்களோடு சேர்ந்து பகிரங்கமாகச் சிந்திக்கவே வந்துள்ளேன்.

இந்த மாணவர் பேரவைக்கு பல்கலைக் கழகத்தின்—அரசாங்கத்தின் ஒப்புதல் கிடைக்கவில்லை என்று கூறப்பட்டது. அத்தகைய ஒப்புதல் கிடைக்காவிடினும், அவற்றைவிடப் பெரிய ஒப்புதலான மக்கள் மன்றத்தின் ஒப்புதல் பெறப்படவேண்டும்.

இந்தப் பேரவையின் பணி பக்குவமும் பயனும் காட்டுவதாயிருந்தால், நிச்சயம் மக்கள் மன்றத்தின் ஒப்புதல் கிடைத்தே தீரும்.

எனினும், இந்தப் பேரவைக்குப் பூர்வாங்கமான ஒப்புதல் பல்கலைக் கழகத்திடமிருந்து கிடைக்க வேண்டும். நிச்சயம் உங்கள் கோரிக்கையை எடுத்துரைத்து ஆவன செய்வேன் என்று உறுதி அளிக்கிறேன்!

மாணவர்கள் — குறிப்பாக இன்றைய மாணவர்கள் சிந்திக்க வேண்டிய ஒரு கருத்து உள்ளது; 'மாணவர் உலகம் சரியான பாதையில்தான் போகிறதா?' என்பதே அந்தச் சிந்தனையின் தொடக்கமாக இருக்க வேண்டும்; பிறகு, 'நமது குறிக்கோள் என்ன? அந்தக் குறிக்கோளை நோக்கிச் செல்கிறோமா?' என்பதைச் சிந்திக்க வேண்டும்.

கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் இன்னும் நாலைந்து ஆண்டுகளில் மருத்துவர்களாகவோ, பொறியியல் நிபுணர்களாகவோ வழக்கறிஞர்களாகவோ, வணிகர்களாகவோ மாறி வாழ்க்கைப் பாதையில் அடி எடுத்து வைக்க இருக்கிறார்கள்!

#### வாழ்க்கைக் களத்தில் இறங்குவதற்கு முன்பு ...!

அப்படி அவர்கள் வாழ்க்கைப் பயணத்தில் ஈடுபடும்போது, அவர்களுக்குப் போதுமான அடிப்படைக் கருத்துக்களில் தெளிவு இருக்கவேண்டும்; அப்போதுதான் வாழ்க்கையில் அந்தக் கருத்துக்களை செயல்படுத்த முடியும்.

ஆகவே, வாழ்க்கையில் கருத்துக்களைச் செயல்படுத்துவதற்குப் போதுமான எண்ணங்களை—சிந்தனைகளை — கருத்துக்களை — மாணவப் பருவத்தில் சேகரித்துக்கொள்ள வேண்டும்.

போர்க்களத்திற்குச் செல்லும் போர்வீரன், தனக்குத் தேவையான பயிற்சியையும் ஆயுதங்களையும் முதலில் பெற்றுக்கொள்ளவேண்டும்; அதற்குப் பிறகே தனது தானைத்தலைவனை நோக்கி, 'எந்தக் களம் எனக்கு? எந்தக் கோட்டையை நான் பிடிக்க வேண்டும்? எந்தப் போர் முறையை நான் கையாள வேண்டும்?' என்று கேட்க முடியும்.

அதுபோல, வாழ்க்கைக் களத்தில் இறங்குவதற்கு முன்பு பயிற்சியும் பக்குவமும், அடிப்படைக் கொள்கைகளில் தெளிவும் பெறவேண்டிய பருவம் மாணவப் பருவம்!

சிந்தனைகளை—கருத்துக்களை நமக்குத் தருவதற்கு ஏராளமான அறிஞர்களும், நிறுவனர்களும், கட்சிகளும் இருக்கின்றன; ஆகவே, அவர்கள் தரும் கருத்துக்களை—சிந்தனைகளைப் பொறுமையுடன் ஆழ்ந்து கவனிக்க வேண்டும்.

அவசரத்தில் இன்று ஒரு கருத்துக்கு ஆட்பட்டுவிட்டு—நாளை இன்னொரு கருத்தைச் சந்தித்தவுடன், 'நேற்று நாம் மேற்கொண்ட போக்குச் சரியில்லை' என நினைக்கும வகையில் இயங்கக்கூடாது!

#### பொறுமையுடன் கேட்டுப் பழகிக்கொள்ள வேண்டும்

பொறுமையுடனும், பொறுப் புணர்ச்சியுடனும எல்லா வகையான கருத்துக்களையும் கேட்டுக்கொள்ள வேண்டும்; எந்தக் கருத்தையும், 'நான் கேட்கத் தகுதியற்ற கருத்து' என்று தள்ளிவிடக்கூடாது.

'அறிவுலகின் கிளர்ச்சியாளர்' எனப் புகழ்பெற்ற வால்டேர் எந்த அறிவாலயத்தில் நுழைந்தாலும்—அறிவாளர்கள் சபையில் நுழைந்தாலும்—வணங்கிப் போற்றத் தகும் சிந்தனையாளர்; இருந்தபோதிலும், அவர் ஒரு முறை கூறினார்—'எனது நண்பர் கூறும் கருத்தை நான் ஏற்க முடியாமல் இருக்கலாம்; ஆனால், கருத்துக் கூறும் உரிமை அவருககு இருக்கிறது என்பதை மறுத்திட யாரையும் நான் அனுமதிக்கமாட்டேன்' என்று!

இதுதான் உண்மையான கருத்துச் சுதந்தரம்; எல்லா வகையான கருத்துக்களையும் நாம் பொறுமையுடன் கேட்டுப் பழக வேண்டும்.

#### இரு பண்புகள் அவசியம்

உண்மையான — முழுமையான விவாதம் நடைபெற நமக்கு வேண்டியது இரண்டு பண்புகள்; ஒன்று—உங்கள் கருத்துக்கு மதிப்பு ஏற்படவேண்டுமானால், மற்றவர் கருத்துக்கும் மதிப்புத் தரவேண்டும்; 'எனக்குத்தான் எல்லாம் தெரியும்; பிறருக்கு எதுவும் தெரியாது' என்று எண்ணிடும் போக்கு கூடாது!

இரண்டு—மற்றவர் கருத்தைக் கேட்கும்வேளையில் மிகுந்த பொறுமை காட்டவேண்டும்.

இது மிகவும் கடினமான காரியம் தான்; அதிலும், வெப்பம் மிகுந்த பகுதியான நமது நாட்டில் உணர்ச்சிகள் விரைவில் தலைதூக்கும்; குளிர் நாடாக இருந்தால் உணர்ச்சிகள் எழவும், எழுந்த உணர்ச்சி அடங்கவும் அதிகக் காலமாகும்.

ஆனால், வெப்பம் மிகுந்த இந்த நாட்டில், காலமோ காரணமோ இல்லாமல்கூட உணர்ச்சி பொங்குவதுண்டு! இன்னும் சில சமயங்களில் உண்மை உருவங்களுடன் சண்டை போடுவதைவிட, வதந்திகள் கிளப்பிய நிழல் உருவத்துடன் நாம் சண்டை போடுவதுண்டு!

இங்கிலாந்து நாட்டில், 'ஜென்கின் என்பானது காதை ஸ்பெயின் நாட்டவர் அறுத்துவிட்டனர்' என்ற வதந்தியை அடிப்படையாக வைத்து — இங்கிலாந்து நாட்டினர் போர்முரசம் கொட்டி—போர்க் கொடியும் தூக்கிவிட்டனர்! பிறகுதான் புரிந்தது—'ஜென்கின் என்பாரது காது அறுக்கப்படவில்லை; அது வதந்தி' என்று!

ஆகவே, வதந்திகளுக்காக-நடைபெறும் போரை ஆங்கிலத்தில், 'ஜென்கின் காதுக்காக நடைபெறும் போர்' என்பார்கள்!

அதுபோன்ற—ஜென்கின் காதுக்காக நடைபெறும் போர்கள் இங்கு நடைபெறுமலிருக்க வேண்டுமானால், எல்லா வகையான செய்திகளையும், கருத்துக்களையும் பொறுமையுடன் கேட்டு முடிவு எடுக்கும் பண்பு வளர வேண்டும்.

மாணவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தில் அரசியல் சட்டத்தைப் படித்துப் புரிந்துகொள்ள முயலவேண்டும்."

---

## முடங்கல் பெற்ற முக்கியத்துவ உபசரிப்பு!

'மிக மிக இரகசியம்' என்று வாசகம் பொறிக்கப்பட்ட வங்காளத்து முதலமைச்சரின் முடங்கல் ஒன்று, கல்கத்தாவில் நடைபெற்ற வேலை நிறுத்தக் கலவரங்களையும் தாண்டிக்கொண்டு நகரைவிட்டுப் புறப்பட்டது என்ற செய்தி, உலகின் கவனத்தைக் கவருவதாக இருக்கிறது.

குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேனுக்குப் புதிய வங்க முதலமைச்சர் பி. சி. கோஷ் எழுதியுள்ள இக்கடிதத்தை விமானத் தபாலில் சேர்ப்பதற்காக விமான நிலையம் கொண்டு செல்லப்படுவதற்கு அஞ்சல் துறையினரின் தந்திரம்—உழைப்பு இரண்டையும் பெரும் அளவுக்குக் 'குடி'த்திருக்கிறது!

இன்னல்கள் பல ஏற்று இக்கடிதத்தை முதலில் போலீசுத் தலைமையகத்துக்குக் கொண்டு சென்ற தபால்—தந்தித் துறையினர், பின்னர், துப்பாக்கி ஏந்திய காவலர் புடைசூழ டம்டம் விமான நிலையத்திற்குச் சென்றிருக்கின்றனர்!

எப்படியோ காலையில் புறப்பட்ட கடிதம், கல்கத்தா விமான நிலையத்துக்கு இரவுக்குள் போய்ச் சேர்ந்துவிட்டிருக்கிறது!

---

## மொகலாயர் காலத்து மயிலாசனம் எங்கே?

புதுடில்லி, நவ. 24—

புதுடில்லியில் மொகலாய மன்னர்கள் அரசாண்டபோது இருந்த மயிலாசனம், தற்போது எங்கே இருக்கிறது என்ற வினாவுக்கு விடை காண்பது கடினமாக இருக்கிறது.

பாரசீக அரண்மனையில் அது இருப்பதாக நெடுங்காலமாகக் கூறப்பட்டு வந்தது.

இந்தியாவிலிருந்து நாதர் ஷா, மயிலாசனத்தைக்கவர்ந்து சென்ற பின்னர், பாரசீகத்தில் இருந்தது என்று சில சரித்திர நிகழ்ச்சிகள் குறிப்பிடுகின்றன.

ஆனால், மயிலாசனத்தின் மர்மம் குறித்து இந்திய வரலாற்று அறிஞர்கள் ஆராய்ந்து பார்த்ததில், மயிலாசனம் சென்ற இடம் குறித்து எதுவும் புலப்படவில்லை.

"அந்தக் காலத்திலேயே மயிலாசனத்திலிருந்த வைரங்களும், தங்கமும் பிரிக்கப்பட்டிருக்கவேண்டும்" என்று சொல்லப்படுகிறது.

---

## உணவு இறக்குமதிக்கு ரூ. 190 கோடி செலவு

### நாடாளுமன்றத்தில் தகவல்

புதுடில்லி, நவ. 25—

"டிசம்பர் திங்கள் முடிவுக்குள் 18 இலட்சம் டன்கள் உணவுத் தானிய இறக்குமதிகளை இந்தியா எதிர்பார்க்கிறது; இதில் பெரும்பகுதிகோதுமையாக இருக்கும்"

என்று உணவுத்துறைத் துணை அமைச்சர் ஷிண்டே, நாடாளுமன்ற மேலவையில் கூறினார்.

இந்த இறக்குமதியில், அரிசி மிகமிகக் குறைவாகத்தான் இருக்குமாம்.

"1966–67, 1967–68 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும், செப்டம்பர் முடிய ரூ. 190.2 கோடி மதிப்புள்ள அந்நியச் செலாவணி இந்த இறக்குமதிகளுக்காகச் செலவிடப்பட்டது" என்றும் அமைச்சர் கூறினார்.

---

உலகில் மக்கள்தொகை நாடுகளில் இந்தியா இரண்டாவதாகவும், பாகிஸ்தான் ஆறுவதாகவும் உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் ஜனத்தொகை எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளது ஆசியாவில்தான்.

---

## கட்சி மாறிய எம்.எல் ஏ -க்கள் எங்கே?

கல்கத்தா, நவ. 24—

மேற்கு வங்காளத்தில் கட்சி மாறிய சட்டமன்ற உறுப்பினர்களின் போக்கு புதிராக இருக்கிறது!

சில உறுப்பினர்கள் எங்கே இருக்கிறார்கள்—என்ன செய்கிறார்கள் என்பது தற்போது தெரியாமல் மர்மமாக இருக்கிறது!

சில எம்.எல்.ஏ.-க்களின் மனைவிமார்கள், போலீசு நிலையத்தில் சென்று புகார் செய்திருக்கிறார்கள்!

"ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் சிலரை, காங்கிரசுக்காரர்கள் வலுக்கட்டாயமாக அடைத்து வைத்திருக்கிறார்கள்" என்று முன்னாள் முதலமைச்சர் அஜாய் குமார் முகர்ஜி கூறியுள்ளார்.

கட்சி மாறிய உறுப்பினர்கள், தங்கள் விருப்பம்போல், பாதுகாப்புடன் இருக்கிறார்கள்" என்று டாக்டர் பி. சி. கோஷ் கூறியிருக்கிறார்.

---

## சர்க்கரை: ஒரு விளக்கம்

ஏற்கனவே வெறும் வாயை மெல்லும் காங்கிரசின் பிரச்சாரப் பீரங்கிகளுக்கு நேற்று முதல் மேலும் ஒரு பிடி அவல் கிடைத்திருக்கிறது!

ஒரு கிலோ சர்க்கரை ரூ. 1.55-லிருந்து ரூ. 2.00 ஆக உயர்ந்திருப்பதும், ஓட்டல்கள் சிலவற்றில் காபியின் விலை 25 காசுகளாக ஏறியிருப்பதும், 'கழக நிர்வாகம் பாரீர்' என்ற தலைப்புக்குப் பயன்படலாம்—தமிழகக் காங்கிரசுப் பத்திரிகைகளுக்கு!

அவைகளுக்கெல்லாம் முதலமைச்சர் அண்ணா அவர்கள் அளித்த விளக்கத்தின் தொடர்ச்சியாக இன்று இதழ்களில் வந்துள்ள புதுடில்லிச் செய்தியினையும் சேர்த்துக் குழப்பத்தில் ஆழ்த்தப்படும் பொதுமக்களுக்கென, கீழ்க் கண்ட தெளிவுகள் தரப்படுகின்றன.

சர்க்கரை பற்றிய செய்தியே புதுடில்லியிலிருந்துதான் வந்திருக்கிறது என்பது முதலில் குறிப்பிடத்தக்கது.

1966—67-ம் ஆண்டுக்கான சர்க்கரை உற்பத்தியில் 40 சதவிகிதத்தினை, தொழிற்சாலைகளின் சுதந்தர விநியோகத்துக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது மத்திய அரசினால்!

எஞ்சிய 60 சதவிகிதமும், மத்திய அரசின் மூலமாகவே மாநில அரசுகளின் விநியோகத்துக்காக வழங்கப்படும்.

இந்த அடிப்படையில், இரு வகை விநியோக முறைகளையும் நேற்று துவக்கியிருக்கிறது புதுடில்லி!

அளவு முறை உள்ள நகர்களுக்காகவென்று இந்த ஒரு மாதத்துக்காக ஓர் இலட்சம் டன் சர்க்கரை எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன; இந்தப் பங்கில் கிடைக்கும் சர்க்கரையை மட்டுந்தான் மாநில அரசுகள், கட்டுப்படுத்தப்பட்ட விலையில் விநியோகிக்க முடியும்!

தொழிற்சாலைகளே நேரடியாக விற்பனை செய்யும் வகையில் மத்திய அரசு, இந்த 23-ந் தேதி முதல் துவங்கி ஒரு மாத காலத்துக்கென 66 ஆயிரம் டன் சர்க்கரையை அனுமதித்திருக்கிறது. இந்தச் சர்க்கரைதான், ரூ 2 விலையில் விற்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

இதுதான் உண்மை நிலை!

காபியின் விலை 25 காசுகளாக உயருவதோ, இனிப்புப் பண்டங்கள் இன்னும் அதிக விலையில் விற்கப்படுவதோ இந்த அடிப்படையில்தான்!

இதனை உணர்த்தும் வகையில்தான் அண்ணா அவர்கள் 'விலை உயர்வு வருந்தத்தக்கது; ஆனால், மாநில அரசுக்கு எந்த உரிமையும் இல்லாத மத்திய அரசின் இந்த நடைமுறைகள் பற்றி. மேலும் விளக்குவது சங்கடமாக இருக்கும்" என, செய்தியாளரிடம் சொல்லியிருக்கிறார்.

---

## சேலம் உருக்காலை

### தமிழக அரசு கோரிக்கை-- மத்திய அமைச்சர் பதில்

"சேலத்தில் உருக்காலை அமைப்பதற்கான உரிமம் கோரி, தமிழக அரசு, மத்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது.

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உருககு உற்பத்தித் தொடர்பாக இறுதி முடிவு செய்யப்பட்டபின், தமிழக அரசின் விண்ணப்பம்பற்றி முடிவு எடுக்கப்படலாம்"

என்று மத்திய உருக்கு அமைச்சர் சென்னா ரெட்டி, நாடாளுமன்ற மேலவையில் கூறினார்.

# அமைச்சரவைகள் மாறின—ஆனால் ‘பாரம்பரியம்’ காக்கப்படுகிறது!

## வங்கத்தில் பிரமச்சாரிகளே முதலமைச்சர்கள் !

20 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் முதலமைச்சராக வந்திருக்கும் வங்காளத்து முதலமைச்சர் டாக்டர் பி. சி. கோஷ், திருமணமாகாத மனிதர் !

சுதந்தரத்துக்குப்பின் வந்த முதல் அமைச்சரவையின் முதலமைச்சராக இருந்த பெருமை அவருக்கே உண்டு !

இவரை அடுத்துவந்த அனைவரும் பிரமச்சாரிகளே என்பதும் குறிப்பிடத்தக்கது !

டாக்டர் பி. சி. ராய், பி. சி. சென், அஜாய் முகர்ஜி ஆகிய எல்லா முதலமைச்சர்களும் திருமணமாகாதவர்கள்தான் !

இத்துணைக் கட்சி மாற்றங்கள்—அரசியல் சூறாவளிகளுக்கிடையிலும், வங்காளத்து முதலமைச்சர்களுக்கிடையே இந்த ஒரு பாரம்பரியம் மட்டும் தொடர்ந்து வந்திருக்கிறது !

# ‘பேறு’கள்

## பல பெற்ற பெண்மணி

திருமணமானபின் ஆண்டு ஒன்றுக்கு ஒரு குழந்தைவீதம் பெற்று தனது 45-வது வயதில் 32-வது குழந்தையினைப் பெற்றெடுத்திருக்கிறாள்—மரியா கர்னுபா சூசர் என்ற பிரசிலியா நகரத்துப் பெண்மணி !

அப்பெண்மணியின் 32-வது குழந்தை, கடந்த 22-ந் தேதி பிறந்திருக்கிறது !

தனது 14-வது வயதில் திருமணம் செய்துகொண்ட அப்பெண்மணியின் கணவனின் இப்போதைய வயது 52 ! எடை 275 பவுண்டுகள் !

# இது போதாது—இன்னும் குறைய வேண்டும் !

## பிரிட்டிஷ் நாணய மதிப்புக் குறைப்புப் பற்றி பிரெஞ்சு நிதியமைச்சர்

“இங்கிலாந்து இப்போது குறைத்துள்ள பவுன் மதிப்பு போதாது ; இன்னும் குறைக்கப்பட்டாக வேண்டும்” என்று, பிரெஞ்சு நிதியமைச்சர், பாரிஸ் டெலிவிஷன் பேச்சு ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஐரோப்பியப் பொதுச் சந்தையில் இங்கிலாந்து பங்குபெறுவதற்காகப் பிரான்சு தெரிவித்திருந்த ஆட்சேபனைகளைப் போக்கும் வகையில் இந்த நாணயக் குறைப்பு இல்லை” என அவர் விளக்கியுள்ளார்.

இதே கருத்தை, பிரான்சின் தலைமை அமைச்சரும் வலியுறுத்தியிருக்கிறார் என்பது நினைவுகூரத்தக்கது.

“பிரான்சின் வற்புறுத்தலே பிரிட்டிஷ் நாணய மதிப்புக் குறைப்புக்கு முக்கிய காரணமாகும்” என்ற ஒரு யூகம் உலவி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## கலைக் குழு முகவரி :

மதுரை தங்கராசு குழுவினரின் ‘நமது சாதனை’ கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் தொடர்பு கொள்க :—

பொ. தங்கராசு,
33, லெட்சுமிபுரம் 7-வது தெரு,
மதுரை.


செலவைக் குறையுங்கள்

# டிவிஎஸ் விநியோகிக்கும் மோட்டார் உறுப்புகளை வாங்குங்கள்







பஸ், லாரி சொந்தக்காரர்கள் எவரை வேண்டுமானாலும் கேளுங்கள். டிவிஎஸ் விநியோகிக்கும் மோட்டார் உறுப்புகள் சிறந்தவை. நீண்ட நாள் உறுதியாக உழைக்கும்.
காரணம்: உறுப்பு உற்பத்தியாளர்களில் பெரும்பாலோர் தங்கள் தங்கள் துறைகளில் தலைசிறந்தவர்

உழைப்பிற்கு ஆராய்ச்சி செய்யப் பெற்ற உறுப்புகளையே டிவிஎஸ் விநியோகிக்கிறது.

TVS டி வி சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட் மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர் - திருவனந்தபுரம் சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ் - பங்களூர் - செகந்திராபாத் (A.P.) மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ் - பங்களூர்

mas-4248

# சட்டமன்றத்தில்...!

[ போகாத நிருபர் ]

பெற்றவர்கள் — மற்றவர்கள் — உற்றவர்கள் ஆகிய அனைவரும் பார்த்து மகிழும் வண்ணம் பாங்கான புதுக்குடித்தனம் நடத்தும் புதிய மண மக்களைப்போல், கழக நிர்வாகத்தில் உள்ள தமிழகத்தின் சட்டமன்றக் கூட்டம், நேற்று குறுகிய கால தொடருக்காகக் கூடியுள்ளது.

தனது நிழலிலேயே தரையின் சூட்டினைத் தடுத்துக் கொள்பவனுக்கு, கொதிக்கும் வெயிலிலிருந்து ஒதுங்கிக்கொள்ளப் பசுமையான மர நிழல் கிடைத்ததுபோல், 'மாநிலக் கவிழ்ப்புகள்'—'கலவரங்கள்' — 'இராணுவம்' — 'அமைச்சரவை நொடிப்புகள்' — 'நாடாளுமன்றங்களில் அமளிகள்'—என்ற செய்திகளையே மிக அதிகமாகப் படித்து மனம் நொந்திருக்கும் தமிழக மக்களுக்கு,

**நம்பிக்கை—பாதுகாப்பு—**

**நல்ல எதிர்காலம்—**

ஆகியனவற்றைத் தந்திருக்கும் தமிழகப் புதிய அரசு, மேலும் சில நல்ல செய்திகளைத்தான் இந்தச் சட்டமன்றத் தொடர்க்கூட்டத்திலும் சொல்ல இருக்கிறது என்பதனை, முதல் நாள் நிகழ்ச்சிகளே எடுத்துக்காட்டியிருக்கின்றன!

சட்டமன்ற அவைத் தலைவர்கள் வரிசையில் புதிய சாதனைகளைப் படைத்துக்கொண்டிருக்கும் **ஆதித்தனார்**, அரசியல் மணம் கமழ இருக்கும் சட்டமன்ற நடவடிக்கைகளுக்கு, முன்கூட்டியே குறள் மணம் தந்து துவங்கியிருக்கிறார்!

தமிழகத்தின் 'ஒளிமிக்க எதிர்காலம்'—'உணவுப் பற்றுக்குறை இல்லாத நிலைமைகள்' இவை இரண்டும் பற்றிய விளக்கங்களை, அமைச்சர்கள் **இரா. நெடுஞ்செழியன், ஏ. கோவிந்தசாமி** ஆகியோர் தந்திருக்கின்றனர்!

'நீர் மின்சார உற்பத்தி தட்டுப்படுமோ' என்ற நிலை இருந்தும், 'அனல் மின்சாரப் பெருக்கத்தின் மூலம் பற்றுக்குறை இல்லாத வசதிகளை இந்த அரசு தரும்' என்ற அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் ஒளிமிக்க நம்பிக்கை, இடர்களைச் சமாளித்து மக்களுக்குத் தொடர்ந்து நன்மைகளைச் செய்ய விழையும் கழக அரசின் முயற்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்!

**'மின்சாரக் கட்டணக் குறைப்பு ஏன் முடியாது' என்பதற்கு அவர் அளித்துள்ள விளக்கம், கழகத் தோழர்களின் அரசியல் விளக்கப் பேச்சுக்களுக்குப் பெரிதும் பயன்படத்தக்கதாகும்!**

பொருள் வசதி இருந்தால், தேவைப்படும் அளவுக்குப் பெருக்கிக் கொள்ளக்கூடியது அனல் மின்சாரம்; ஆனால் நீர் மின்சாரம், இயற்கையின் போக்குக்குக் கட்டுப்பட்டது; 'வளர்ந்துவரும் தேவைகளுக்கேற்ப கிடைக்கும்' என்ற நம்பிக்கையுடன் இருக்கக்கூடியது அனல் மின்சாரமே; ஆனால், இதற்கு ஆகும் செலவு அதிகம்! எனவே தான், 'மின்சாரக் கட்டண உயர்வு' என்பது!

'மின்சாரக் கட்டண உயர்வு ஏன்' என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதற்குப் பின்னரும் கேள்விகள் எழுப்புவார்களானால், அது, அரசியல் அடிப்படையில்தான் இருக்கவேண்டும்!

மின்சாரக் கழக நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பங்குபெற்றிருக்கும் இரு கழக உறுப்பினர்களும்—தேர்தலுக்கு முன்பு வரையில் மின்சார இலாகாவில் பணியாற்றியவர்கள்—என்ற வகையில், தங்கள் கருத்துக்களின் மூலம் சிறப்பான கவனத்தைப் பெற்றிருக்கின்றனர்!

பண்ருட்டி உறுப்பினர் **எஸ். இராமச்சந்திரன்**, தாம் ஒரு பொறியியல் பட்டதாரி மட்டுமலல என்பதை, மிக நேர்த்தியாக எடுத்துக்காட்டியிருக்கிறார்!

"மின்சாரக் கழக ஊழியர்கள் புதிய அரசில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்; அவர்களுக்கு நமது அரசும் 'ஏதாவது' செய்யவேண்டும்" என்பதனை, மிக 'இலாவக'மாக அவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்!

'வெள்ளத்தனைய மலர் நீட்டம்' என்பார்கள்; 'வீணை வாசிப்பவருக்குப் பணம் கொடுத்தால், 'நாம் விரும்பிய நாதத்தைப் பெறலாம்' என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள்; அதுபோல் தொழிலாளர்களுக்குத் தக்க ஊக்கம் அளிக்கப்பட வேண்டும்"

என்ற அவரது விருப்பத்தில், உவமை அழகுடன் உறுதிப்பாடான கோரிக்கையும் பொதிந்திருக்கிறது!

"சிறிய கார் உற்பத்தித் துறையில் மத்திய அரசு பச்சைவிளக்குக் காட்டினால், தமிழகமே அதனை முன்வந்து தயாரிக்கும்"

என்று, கேள்வி ஒன்றுக்குத் தரப்பட்ட பதிலில் அண்ணா அவர்கள் தந்த விளக்கமும்.

"குறைந்த செலவில் நெய்வேலி மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாவிட்டால் அங்கே உள்ள மின் நிலையத்தைத் தமிழக மின் கழகத்திடம் மத்திய அரசு விட்டுவிடட்டும்; ஆற்றல்மிக்க வல்லுநர்கள் நம்மிடம் இருக்கிறார்கள்"

என்ற எஸ். இராமச்சந்திரனின் உரையும், புதுடில்லியின் கவனத்தைக் கவருவதாக இருக்கின்றன!

**"அந்நிய நாட்டுக் கடன்களில் குறுக்கிட்டு மத்திய அரசு அதிக வட்டியினைத் தமிழகத்திடம் வசூலிப்பதும், அதேபோது நெய்வேலி மின்சாரத்தைக் குறைந்த விலைக்கு விநியோகிக்க மறுப்பதும், மின்சாரத் துறையில் தமிழகம் பெற்றுள்ள சாதனைப் பட்டியல்களுக்கு களங்கம் கற்பிக்கும் முயற்சியோ"**

என, எஸ். இராமச்சந்திரன் ஐயப்பட்டிருப்பது, சரியான அரசியல் யூகமாகக்கூட இருக்கலாம்!

மற்றொரு முன்னாள் மின்சார இலாகா ஊழியரும் ஆற்காடு கழக உறுப்பினருமான நா. வீராசாமி, மின் துறை ஊழியர்களிடையே நீண்ட நாட்களாக இருந்துவரும் சில தேவைகளைப் பிரதிபலித்திருக்கிறார்!

**"வீடுகளுக்கான மின்சார விநியோகக் கட்டணத்தைக் குறைத்துப் பெருந் தொழில்களுக்கான கட்டணங்களை உயர்த்துவதன் மூலம், ஊழியர்களின் ஊதியத் தேவைகளைப் போக்கலாம்" என்று பேசியிருக்கும் அவர், அத்துடன், 'மின்சாரம் நீண்ட தூரம் கொண்டுவரப்படும்போது ஏற்படுகிற இழப்புக்களைச் சரிகட்டுவதன் மூலமும் வருவாயை அதிகரிக்கலாம்" என்ற யோசனையையும் வழங்கியுள்ளார்!**

**"கண்ணீர் இல்லாமல் கொள்முதல்" என்ற கழக அரசின் திட்டம் பெற்றிருக்கும் வெற்றியினை, விவசாய அமைச்சர் ஏ. கோவிந்தசாமி,**

**'7,88 959 டன் அரிசியினை அரசு வாங்கியிருக்கிறது'**

என்று அறிக்கை மூலம் விளக்கியுள்ளார்.

"எட்டு இலட்சம் டன் இலக்கு இவ்வளவு விரைவில்—இரு தரப்பாருக்கும் இடர்கள் ஏதும் இல்லாமல்—நிறைவேறியிருக்கிறதே"

என்று மகிழ்ச்சியினால் வியந்து கொண்டிருக்கும் போதே, அண்ணா அவர்கள் தந்திருக்கும்—

"மொத்த உற்பத்தியில் கொள்முதல் செய்யப்பட்டிருப்பது 20 சதவிகிதம் மட்டுமே"

என்ற அறிவிப்பு, மேலும் திகைப்பினைக் கொடுத்து, ஆனந்தத்தில் திளைக்க வைக்கிறது!

வெள்ளிக்கிழமையன்று கேள்வி நேரம், 'அரசியல் ஒளி' மிக்கதாக இருந்திருக்கிறது!

தத்துவப்படியோ — தர்க்கப்படியோ — எப்படியும் காங்கிரசுக்காரர்கள் மறு கேள்வி போடாத வகையில், தலைமையமைச்சர் இந்திராவின் தமிழகப் பயணத்துக்கான செலவு பற்றி அண்ணா அவர்கள் தந்திருக்கும் கண்ணியமிக்க விளக்கம், எதிர்க் கட்சியினரால் 'ஜீரணிக்க' முடியாத ஒன்றுதான்!

**'பைல் எரிப்பு'ப் பிரச்சினையில் அண்ணா அவர்கள் காட்டிய பெருந்தன்மை, 'தலைமையமைச்சரின் தேர்தல் பயணச் செலவு' விவகாரத்தில் சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது!**

'தான் விரும்பிய ஒருத்தி கேட்டாளே' என்பதற்காக, தாயின் இதயத்தையே கல்லி எடுத்து ஓடியவன், கால் தடுக்கித் தவறியபோது, 'மகனே, வலிக்கிறதா?' என்று கேட்டதாம் அந்த பெற்றவளின் நெஞ்சு!

இருபதாண்டுகளாக அவர்கள் இழைத்த அரசியல் தவறுகளை—நிர்வாகக் குறைகளை அண்ணா அவர்களைவிடக் கண்ணியமாக எடுத்துக் காட்டும் — கண்டிக்கும் முதலமைச்சரை, காங்கிரசார் பார்க்க முடியாது என்பதனை, நேற்றைய நிகழ்ச்சி எடுத்துக்காட்டியிருக்கிறது!

## தடுமாற்றமா? தட்டிக்கழிப்பா?

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தூத்துக்குடித் துறைமுகத்தைப் பொறுத்தவரையில், 'அந்தத் திட்டம் நிறைவேறுமா' என்று இருந்த அச்சம் இப்போது அடங்கிவிட்டது; டில்லி அரசும் தொடர்ந்து உதவி செய்ய சம்மதித்ததன் காரணமாக அங்கே தொடர்ந்து வேலை செம்மையாக நடந்துவருகிறது.

எனவே, தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் நிறைவேறும்—அது வெற்றிபெற்றே தீரும்—என்பதில் சந்தேகமே இல்லை.

வெளிநாட்டினர் என்னைச் சந்திக்கும்போது சேலம் இரும்பு ஆலையைப்பற்றி ஆச்சரியத்துடன் கேட்கிறார்கள்: 'இவ்வளவு சிறந்தத் திட்டத்தை ஏன் இன்னும் நிறைவேற்றவில்லை' என்று கேட்கிறார்கள்!

அவர்களிடம், 'இந்த ஆலையை நடத்தும் அதிகாரம் டில்லியில் தான் இருக்கிறது' என்று சொல்ல எனக்கே கூச்சமாக இருக்கிறது! எனவே, அவர்களிடம், 'இன்னும் சில காலத்தில் நாங்கள் அதை நடத்துவோம்' என்று பதில் கூறிவருகிறேன்."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமன்றத்தைக் கூட்டும்படி முதலமைச்சருக்குக் கட்டளை பிறப்பிக்க ஆளுநருக்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்ற பிரச்சினையில், தலைமை நீதிமன்றத்தின் கருத்தை அறிய வேண்டும்' என்ற கோரிக்கையை, குடியரசுத் தலைவரிடம் கொடுத்தது முகர்ஜி அமைச்சரவை. கூட்டு அமைச்சரவையின் இவ்வேண்டுகோளை, இந்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை; 'இத்துறையில், தலைமை நீதிமன்றத்தின் கருத்தை அறியத் தேவையில்லை' என இந்திய அரசு, கூட்டு அமைச்சரவையின் நியாயமான கோரிக்கையை அலட்சியப்படுத்தித் தள்ளிவிட்டது.

தாம் கோரியபடி, 'சட்டமன்றத்தைக் கூட்ட கூட்டு அமைச்சரவையை வெளியேற்றிவிட்டார்—காங்கிரசு மேலிடத் தலைவர்களின் ஏழு மாத ஆசையை, ஆளுநர் தர்மவீரா நிறைவேற்றி வைத்துவிட்டார்!

முகர்ஜியின் கூட்டு அமைச்சரவைக்குச் சட்டமன்றத்தில் ஆதரவு இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டறிவதுதான் ஆளுநரின் மூலக் குறிக்கோளாக இருக்கும்பட்சத்தில், முதலமைச்சர் அறிவித்துள்ளபடி, சட்டமன்றத்தைக் கூட்ட ஒரு மாதக் கெடு கொடுத்திருக்க வேண்டும். அப்படி கொடுப்பதால், வங்காளத்துக்குப் புதிய ஆபத்து எதுவும் ஏற்பட்டுவிடப்போவது கிடையாது.

முகர்ஜியின் விருப்பம்போல், ஒரு மாதத்துக்குப் பின்னர் சட்டமன்றம் கூட்டப்படுகின்றபொழுது, சட்டமன்றத்தின் பெரும்பான்மையைக் கூட்டு அமைச்சரவை இழந்துவிடும்பட்சத்தில் கூட்டு அமைச்சரவை, தானாகவே பதவியைவிட்டு விலகிவிடக்கூடும். அப்படிப் பதவியை விட்டு வெளியேற மறுக்கும்பட்சத்தில், இப்போது செய்ததுபோல், அந்த அமைச்சரவையைப் பதவியிலிருந்து ஆளுநர் வெளியேற்றிவிட்டிருக்கலாம். சட்டமன்றத்தின் நம்பிக்கையை இழந்துவிட்ட அமைச்சரவையை, ஆளுநர் வெளியேற்றுவது சட்டப்படியும், சனநாயக உணர்வுப்படியும் நியாயமானதாகும்; அதை எவரும் குறைகூற மாட்டார்கள்.

ஆனால் இன்றோ, முகர்ஜியின் கூட்டு அமைச்சரவையை—ஆளுநர் தர்மவீரா—பதவியிலிருந்து நீக்கிவிட்டிருப்பதை, 'சனநாயகப் படுகொலை' என்றுதான் சொல்லவேண்டும். உண்மையான சனநாயக நடைமுறையில் நம்பிக்கையுள்ள எவரும், ஆளுநரின் வரம்பு கடந்த இச்செயலைக் கண்டிக்கத்தான் செய்வர்.

—கா. க.

## திரைப்படத் தணிக்கை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

லளிக்கையில் குறிப்பிட்டதாவது,-

"எது ஆபாசம் என்று நிர்ணயிப்பதற்காகப் போலீசுக் கமிஷனரைச் செயலாளராகக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு, தனது முடிவினைத் தெரிவித்த பின், அந்தக் குழுவின் பரிந்துரைக் கேற்ப, 'ஆபாசம்' எனக் கருதப்படும் சுவரொட்டிகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

'எது ஆபாசம்' என்பதை ஆராய்ந்துவரும் அந்தக் குழு, திரைப் படத் தணிக்கைக் குழுவினர் எதை ஆபாசம் என்று கருதுகிறார்களோ, அதையே சுவரொட்டிகள் தொடர்பாகவும் கொள்ளலாம் என்று கருதுகிறது; எனவே, குழுவின் முழுப் பரிந்துரையும் கிடைத்து அதனை அரசு ஏற்றுக்கொண்ட பின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்,"

சித்தன் (காங்):— "தற்போது வெளிவரும் பல படங்களில் இனக் கவர்ச்சிக் காட்சிகள் அதிகமாக இருப்பதால் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?"

அமைச்சர்:— "திரைப் படத் தணிக்கைக்கும் — மாநில அரசுக்கும் தொடர்பில்லை. திரைப் படத் தணிக்கைக் குழுவை மத்திய அரசுதான் நியமிக்கிறது."

அரங்கண்ணல்:—"தமிழ்ப் படங்களைவிட வட இந்தியப் படங்களிலும், ஆங்கிலப் படங்களிலும்தான் இனக் கவர்ச்சிக் காட்சிகள் அதிகமாக இருப்பதால் அவற்றைத் தடுக்கக் கூடிய வகையில் எல்லாத் திரைப்பட அதிபர்களையும் கூட்டிக் கலந்துபேச அரசு முயற்சி எடுத்துக்கொண்டதா?"

பதில்:—"எந்தப் படமானாலும் அதில் ஆபாசக் காட்சிகளைத் தடுக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை."

எஸ் இராமச்சந்திரன்:— "இந்தியா பல்வேறு கலாசார—பண்பாடுகளைக் கொண்டிருப்பதால், ஒவ்வொரு மாநிலத்துக்கும் தனித் தனித் தணிக்கைக் குழு ஏற்படுத்த முயற்சி எடுத்துக் கொள்ளப்படுமா?"

பதில்:— "மாநில அரசைக் கலந்து தணிக்கைக் குழு உறுப்பினர்களை நியமித்தால், நமது கலாச்சாரத்தைக் காக்கக்கூடியவர்களை நாம் சிபாரிசு செய்யலாம். இதுபற்றி நான் டில்லியில் அமைச்சர் கே. கே. ஷாவிடம் சொன்னேன்; இனிமேல் உறுப்பினர்களை நியமிக்கும்போது, மாநில அரசைக் கலந்தாலோசிப்பதாக அவர் உறுதி கூறியிருக்கிறார்."

கேள்வி:— "பத்திரிகைகளில் வெளியாகும் ஆபாசத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?"

பதில்:—"பத்திரிகையில் ஆபாசம் என்று கருதப்படுவதன்மீது இ. பி. கோ. 292 பிரிவின்படி நடவடிக்கை எடுக்கப் போலீசுக்கு அதிகாரம் உண்டு."

## நடக்க இருப்பவை

### 27--11--67

**சென்னை 1-வது வட்டம்**

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு புதுவண்ணை அருணாசல ஈசுவரர்கோயில் திடலில்; தலைவர்: சோ. கணேசன்; பேசுவோர்: அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., க. அறிவழகன் எம்.ஏ., எம்.எல்.சி., துரை. முருகன், திருச்சி சவுந்தரராசன், ஜிவா கலைமணி, நடிகர் எஸ். இராமராவ், எம். எஸ். இராசாமணி.

**கெம்பநாயக்கன்பாளையம்**

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு மாரியம்மன்கோயில் திடலில்; தலைவர்: கே. ஜி. நஞ்சப்பன்; பேசுவோர்: திருவை அண்ணாமலை, ஜி. பி. வெங்கிடு எம்.சி., பி. கே. பழனியப்பன், எஸ். ஜி. கண்ணப்பா, எஸ். கே. சுப்பிரமணியம், இரா. பாலகோபால், சிவக்கொழுந்து, கே. ஏ. வகாப்.

**கோவை 2-வது வட்டம்**

ஆரோக்கியசாமி நினைவு படிப்பகச் சார்பில் இரவு 7-மணிக்கு பா. நா. பாளையம் காட்டூர் வீதி வள்ளுவர் திடலில்; தலைவர்: பொ. நடராசன்; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., சே. ஆ. இராசமாணிக்கம் எம்.சி., ப. கோபால், காட்டூர் கோபால், சி. இராசன்.

## மறைவு

சென்னை 6-வது வட்டம் அண்ணா மறுமலர்ச்சி மன்றச் செயற்குழு உறுப்பினர் முனுசாமி அவர்கள், 20—11—67 அன்று இயற்கையெய்திவிட்டார்; அவரைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தாருக்கு மன்றச் சார்பில் அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24- சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13 அச்சிட்டு வெளியிடப்படுகிறது.)